

# மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம்

(மருதம் கல்வி அறக்கட்டளை) கும்பகோணம்

Reg.No.95/2019, UDYAM TN 22-0004191
ISO 9001:2015 No.UCS8022-23B11241



## தேசியக் கருத்தரங்கம்

## சான்றிதழ்

நாள் : 26.10.2025 இடம் : கும்பகோ

திரு/செல்வி/திருமதி ........ முனைவர் நா. தீபாராணி ........ அவர்

காலந்தோறும் வழக்கில் உள்ள நாட்டுப்புறக் கலைகள் என்னும் பொருண்மைய

கும்பகோணம் மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம் நடத்திய தேசியக் கருத்தரங்

ங்கேற்று சிலப்பதிகாரம் முதல் இக்காலம் வரையிலான உழவண்பாட்டு. என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டு

ழங்கிச் சிறப்பித்தார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| A. [signature] | [signature] | முனை. ஆ. [signature] |
| தலைவர் | செயலாளர் | ஒருங்கிணைப்பாளர் |

53. குலசை முத்தாரம்மன் தசரா விழாக்கால கலைகள்
முனைவர் கா.சந்தானலெட்சுமி 317

54. வில்லிசைக் கட்டமைப்பில் சிலப்பதிகாரம் முனைவர்
சு. கமலா ஏஞ்சல் பிரைட் 322

55. சங்க இலக்கியத்தில் கூத்துக்கலைகள் பேராசிரியர்
கு.பார்த்தீபன் M.A.,M.Phil.,NET., 330

56. சிலப்பதிகாரம் முதல் இக்காலம்
வரை உள்ள உழவன் பாட்டு.
முனைவர் நா. தீபாராணி 336

57. நாட்டுப்புற இலக்கியங்களில் வாழ்வியற் பதிவுகள்
முனைவர் ச. திவ்யபாரதி 349

58. பண்பாட்டுப் பரவலில் கொக்கலிஆட்டம்
வெ. வினோத்,M.A. Tamil, NET 354

59. அறிவோம் முத்துப்பாட்டன் கதைப்பாடல்
முனைவர் கே. இரா. கமலாமுருகன் 361

60. நாட்டுப்புற இலக்கியங்களில் புலப்படும்
அறச்சிந்தனைகள்
முனைவர் வ.கோபாலகிருஷ்ணன் 366

61. Traditional Arts and Sports:
From Ancient Heritagetothe Digital Age
C.V.MALARVARSA 374

# 56. சிலப்பதிகாரம் முதல் இக்காலம் வரை உள்ள உழவன் பாட்டு.

முனைவர் நா. தீபாராணி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயிர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை

## முன்னுரை

சங்க இலக்கியங்களுக்குப் பின்னர் பல நூறு ஆண்டுகளில் பலவகையான இலக்கியங்களைத் தமிழ் நலம் சார்ந்த புலவர்கள் படைத்திருக்கின்றனர். காப்பிய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் முதலான இலக்கிய வகை சார்ந்த இடைக்கால இலக்கியங்களில் மரபு சார்ந்த, நாட்டுப்புறவியல் சார்ந்த ஆடல், பாடல் தொடர்பானவும், பிற கலைகள் பற்றியனவும், கலைஞர்கள், நாட்டுப்புற மக்கள் தொடர்பானவுமான நிரம்பச் செய்திகளை அறியமுடிகின்றது. குறிப்பாகப் பாடலமைப்பில், பாடலில் அமைந்த இசை தாளம், இராகம், சந்தம் முதலானவற்றைச் சங்கப் பாடல்களினின்று மாற்றம் பெற்றமைந்த வளர்நிலையை இடைக்கால இலக்கியங்கள் வழித் தெரிய முடிகின்றது. நாட்டுப்புற மக்களின் கலையியல், வாழ்வியல் இவ்விலக்கியங்களில் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இதை சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறக் கூறுகளைக்காணலாம்.

## காப்பிய இலக்கியங்களில் நாட்டுப்புறக் கலைகள்

முத்தமிழ்க் காப்பியமும், தமிழின் முதல் காப்பியமுமான சிலப்பதிகாரம். இதனைத் தொடர்ந்து படைக்கப்பெற்ற மணிமேகலை, இடைக்காலத்துப் பெருங்காப்பியமான. சமணச் சார்புடைய சீவகசிந்தாமணி ஆகியவற்றில் காணலாகும் நாட்டுப்புறக் கலைகள் குறித்த செய்திகளும், ஒப்பீட்டு நோக்கில் இச்செய்திகளோடுத் தொடர்புடைய இக்கால நாட்டுப்புறக் கலைகள் குறித்த செய்திகளும் பின்வரும் பகுதியில் எடுத்துரைக்கப்படுகின்றன.

## சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறக் கலைகள்

இயற்றப்பெற்ற கி.பி.2-ஆம் நூற்றாண்டளவில் இளங்கோவடிகளால் தமிழின் தலைக்காப்பியமாகத் திகழ்கின்ற சிலப்பதிகாரம் இயற்றப்பட்டது. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதை. வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை முதலான பகுதிகளில் காணலாகும் பதிவுகளை முன்வைத்து ஆட்டக் கலையியல் பற்றி எடுத்துரைத்திடலாம்.

ஆட்டக் கலையியல் நோக்கில், ஆட்டக் கலையின் தோற்றம், ஆட்டப் பொருண்மை, கலை நிகழ்வு, கலைஞரின் கலைச் சாதனைகள், பெற்ற பரிசுகள். விருதுகள் போன்றவை குறித்து அறியலாம். அந்த வகையில் மாதவியின் பிறப்பு, மரபு முறை, ஆடல் பயிற்சி முறை, ஆட்டக் கலைக்குரிய தோற்றப் பொலிவு ஆடும் திறன். பாடும் திறன், ஆடல் அரங்கேற்றம். அரசபையில் பெற்ற பரிசுகள். ஆட்ட வகைகள், வேத்தியல், பொதுவியல் ஆகிய இருநிலைகள், தலைக்கோலிப் பட்டம் பெற்றமை பற்றி இவ்வியலில் ஆய்ந்துரைக்கப்படுகிறது.

தமிழ் மரபுக் கலைகளான இசையும் கூத்தும் உள்ளத்திற்கு உவகை அளிக்கும் கவின் கலைகளுள் குறிப்பிடத்தக்கவையாகச் சிறந்து விளங்குகின்ற கலையியல் அமைப்பு முறையை. அதன் நெறிபாடுகளை இளங்கோவர் தெளிவாக இயம்புகின்றார். அதற்கு கிபி12-ஆம் நூற்றாண்டில் தோ அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் உரை வரைந்துள்ள இவ்வுரைகள் பிற்காலத்தில் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார். பெரும புலவர் சோமசுந்தரனார் ஆகிய சான்றோர்களும் பல ஆய்வாளர்களும் ஆய்வு செய்திடுவதற்குரிய கலைப்பெட்டகமாகச் சிலப்பதிகாரம் விளங்குகிறது. உ.வே. சாமி நாதய்யர்கள் சிலப்பதிகாரத்தை பதிப்பாசிரியர்கள் மூலமும் உரையுமாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

ஆட்டக் கலையியல் நோக்கில், ஆட்டக் கலையின் தோற்றம், ஆட்டப் பொருண்மை, கலை நிகழ்வு, கலைஞரின் கலைச் சாதனைகள், பெற்ற பரிசுகள், விருதுகள் போன்றவை குறித்து அறியலாம். அந்த வகையில் மாதவியின் பிறப்பு, மரபு

# காலந்தோறும் வழக்கில் உள்ள நாட்டுப்புறக்கலைகள்

தேசியக் கருத்தரங்கம்






பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. கவிதாராணி

முனைவர் செ. கணேசமூர்த்தி

முனைவர் பா. ரேவதி